ஆண்டு பட்டிகை வழக்கு எண்.171/2025

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 171/2025 LW- 11 PW- 7

| | |
|---|---|
| Name | : தர்மர் (முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : முத்துக்கண்ணன் |
| Village | : சார்பு ஆய்வாளர் |
| Taluk | : வேடசந்தூர் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது வேடசந்தூர் காவல் நிலையத்தில் காவல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2025ம் தேதி 21.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, லிங்கவாடி கிராமம், வடக்கு தெருவைச் சேர்ந்த சசிக்குமார் மனைவி சந்தியா என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.183/2025 281, 106(1) BNS பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர்

திரு.சிவராமகிருஷ்ணன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) 18.04.2025ம் தேதி மாலை 6.00 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு இரவு 9.00 மணிக்குதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவ நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவம் நடந்தவுடன் காயம்பட்ட அவரது மகனை முதலில் வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்று பின்பு நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார் மனுவில் விபத்தானது ரோட்டின் எந்த பகுதியில் விபத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.26 15:49:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்